# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)
*******

முறையீட்டு மனு எண். 199/நகராட்சி/2018
நாள் : 27/12/2018

**திரு R. மதனகோபால்,**
**சிவகாசி – 626 124..** – **முறையீட்டு மனுதாரர்**

**நகராட்சி ஆணையர்,**
**சிவகாசி நகராட்சி,**
**தூத்துக்குடி நகராட்சி,**
**இராஜபாளையம் நகராட்சி,**
**வேலூர் மாநகராட்சி,**
**திண்டிவனம் நகராட்சி,**
**கோவில் பட்டி நகராட்சி** – **எதிர் மனுதாரர்கள்**
**உதகமண்டலம் நகராட்சி.**

விருதுநகர் மாவட்டம், சிவகாசி, எழில் நகர், எண்.2/781–A, நான்காவது குறுக்குத் தெரு முகவரியில் வசிக்கும் ஒய்வு பெற்ற துப்புரவு ஆய்வாளர் திரு இரா. மதன கோபால் அவர்களின் 31.08.2018 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 10.09.2018 அன்று பெறப்பட்டு 199/2018 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## <u>ஆணை</u>

விருதுநகர் மாவட்டம், சிவகாசி, எழில் நகர், எண்.2/781–A, நான்காவது குறுக்குத் தெரு முகவரியில் வசிக்கும் ஒய்வு பெற்ற துப்புரவு ஆய்வாளர் திரு இரா. மதன கோபால் என்பவர், தான் பணியாற்றிய கீழ்க்காணும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளிடமிருந்து பணி ஒய்வுக்குப் பின் தனக்கு வழங்கப்படவேண்டிய சேமநலநிதிக்கான வட்டித் தொகை, விடுப்பு ஊதியம் மற்றும் ஊதியக்குழு நிலுவைத் தொகை தனக்கு வழங்கப்படவில்லை எனத் தெரிவித்து இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

| வ.எண் | நகராட்சி / மாநகராட்சி பெயர் | பணியாற்றிய காலம் | |
|---|---|---|---|
| 1 | சிவகாசி | 22.08.1973 | 19.06.1988 |
| 2 | தூத்துக்குடி | 20.05.1988 | 30.09.1990 |

| | | | |
|---|---|---|---|
| 3 | இராஜபாளையம் | 03.06.1994 | 31.05.1994 |
| 4 | சிவகாசி | 14.07.1997 | 17.05.1999 |
| 5 | திருவள்ளூர் | 20.05.1999 | 07.11.2000 |
| 6 | வேலூர் | 09.11.2000 | 29.11.2001 |
| 7 | திண்டிவனம் | 04.01.2002 | 19.09.2003 |
| 8 | கோவில்பட்டி | 22.09.2003 | 09.08.2004 |
| 9 | உதகமண்டலம் | 13.08.2004 | 31.08.2008 |

2. முறையீட்டு மனுதாரரிடம் 14.11.2018 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. தான் தருமபுரி நகராட்சியில் பணியாற்றிய போது 2010–ஆம் ஆண்டு பணி ஓய்வு பெற்றதாகவும், 8 ஆண்டுகள் ஆகியும் தனக்கு வழங்கப்படவேண்டிய மேற்குறிப்பிட்ட நிலுவைத் தொகைகள் குறித்து அரசின் பல துறைகளுக்கு முறையீடு செய்தும் இன்றைய நாள் வரை தனக்கு வழங்கப்படவில்லை என விசாரணையின் போது தெரிவித்தார். நகராட்சி நிர்வாக ஆணையர் தனது 29.02.2008 நாளிட்ட சுற்றறிக்கை எண்.9019/எல்3/2008 மற்றும் 10.04.2008 நாளிட்ட சுற்றறிக்கை எண்.16729/எல்3/2008–இல், ஓய்வு பெற்ற நகராட்சிப் பணியாளர்களுக்கு, பணியின் போது பிடித்தம் செய்யப்பட்ட சேமநல நிதிக்கான வட்டித் தொகையினை வழங்குவது குறித்து மேற்கொள்ளப் படவேண்டிய நடவடிக்கைக் குறித்த வழிகாட்டுதல்களை அறிவிக்கை செய்துள்ளார். எனவே, மேற்குறிப்பிட்ட சுற்றறிக்கைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்களின் அடிப்படையில், தனக்கு வழங்கப்படவேண்டிய சேமநல நிதித் தொகை மற்றும் வட்டி, விடுப்பு ஊதியம் மற்றும் ஊதியக்குழு நிலுவைத் தொகை ஆகியவற்றினை வழங்கக்கோரும் மனுவினை உரிய ஆவணங்கள் மற்றும் தேவையான விவரங்களுடன் தருமபுரி நகராட்சி ஆணையருக்கு மனுச் செய்யுமாறு முறையீட்டு மனுதாரருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

3. முறையீட்டு மனுதாரரிடமிருந்து பெறப்படும் மனுவினை உரிய ஆவணங்களின் அடிப்படையில் பரிசீலனை செய்து சம்பந்தப்பட்ட நகராட்சி ஆணையர்களிடம் உரிய அறிக்கையினையும், உள்ளாட்சி நிதித்தணிக்கைத் துறை இயக்குநரின் ஒப்புதலையும் பெற்று, சேமநல நிதித் தொகை மற்றும் பிற நிலுவைத் தொகைகளை வழங்குவதற்கான நடவடிக்கையினை விரைந்து மேற்கொள்ளும்படி தருமபுரி நகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தியும் இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

**2018– ஆம்** ஆண்டு, **டிசம்பர்** திங்கள், **27–ஆம்** நாளன்று, என்னால் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையிட்டு ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

28/1/2019

செயலாளர்

25/1/19

பெறுநர்

1. திரு R. மதனகோபால்,
2/781–A, எழில் நகர்,
நான்காம் குறுக்குத் தெரு,
சிவ்காசி மேற்கு – 626 124

2. நகராட்சி ஆணையர்,
தருமபுரி நகராட்சி,
தருமபுரி மாவட்டம்.

1. நகராட்சி ஆணையர்,
சிவகாசி நகராட்சி,
சிவகாசி, விருதுநகர் மாவட்டம்.

2. நகராட்சி ஆணையர்,
இராஜபாளையம் நகராட்சி,
இராஜபாளையம், விருதுநகர் மாவட்டம்.

3. நகராட்சி ஆணையர்,
திண்டிவனம் நகராட்சி, திண்டிவனம், விழுப்புரம் மாவட்டம்.

4. நகராட்சி ஆணையர்,
கோவில்பட்டி நகராட்சி, கோவில்பட்டி, தூத்துக்குடி மாவட்டம்.

5. நகராட்சி ஆணையர்,
உதகமண்டலம் நகராட்சி, உதகமண்டலம்.

6. மாநகராட்சி ஆணையர்,
தூத்துக்குடி மாநகராட்சி, தூத்துக்குடி.

7. மாநகராட்சி ஆணையர்,
வேலூர் மாநகராட்சி, வேலூர்.

முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு – 3
இ.கோ. / உதிரி